
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1101

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

46

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# கழகத்தை நோக்கி நகர்ந்த கலைமன்றம்!

திண்டுக்கல், சின்னாளப்பட்டி பகுதிகளில் அண்ணா, கலைஞர், பேராசிரியர், நாவலர் உள்ளிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்கள் நடந்தால், கு.சி.பழனிச்சாமி தன் பகுதியில் இருந்து மாணவர்களை அழைத்துச் செல்வார். தினசரி நூல்களைப் படிப்பது, விவாதிப்பது, பேச்சுப்பயிற்சி என இருந்த மாணவர்களுக்கு அண்ணா, கலைஞர், பேராசிரியர் உள்ளிட்டோரின் உரைகள், கொள்கை உணர்வை ஊட்டி வளர்த்தன.

'பவளக்கொடி', 'வள்ளி திருமணம்', 'சாரங்கதாரா', 'நல்லதங்காள்' ஆகிய நாடகங்கள்தான் கும்மம்பட்டியில் ஆண்டாண்டுக் காலமாக நடந்தன. அவை தவிர, வேறு எந்த நாடகத்தையும் கும்மம்பட்டி மக்கள் பார்த்ததில்லை. அதனால், பகுத்தறிவுக் கருத்துகளை நாடகம்மூலம் வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது, கலைமன்றம்.

சுமார் மூன்று ஆண்டுகள் பயிற்சி எடுத்து, 1952-இல் கலைஞரின் 'தூக்குமேடை' நாடகத்தை நடித்தனர். அப்போது, தூக்குமேடை நாடகம் தடை செய்யப்பட்டிருந்தது. அதனால், 'இளைஞர் குரல்' என்ற பெயரில் மாற்றி, அந்த நாடகத்தை நடித்தனர். காவல் துறை, அரசு அதிகாரிகள், சுற்றுப்புற கிராமங்களில் இருந்து பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் பலரும் வருகை தந்து நாடகத்தைப் பார்த்துவிட்டு பாராட்டிச் சென்றனர்.

அதன்பிறகு, வெளியூர்களில் இருந்தும் தங்கள் ஊரில் நாடகம் நடத்த வருமாறு கலை மன்றத்திற்கு அழைப்புகள் வந்தன. ஆனால், முக்கிய வேடங்களில் நடித்த வில்லனாக நடித்தார்.

அதே ஆண்டுதான் கலைஞரின் 'பராசக்தி' திரைப்படம் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் வெளியானது. 'தூக்குமேடை' நாடகத்தின் சில பகுதிகளும் 'பராசக்தி' படத்தில் இடம்பெற்றிருந்தன. இந்த இரண்டு காரணமும் சேர்ந்து கும்மம்பட்டி இளைஞர்களைப் 'பராசக்தி'யைப் பார்க்கத் தூண்டியது. முதல் நாளே கும்மம்பட்டியில் இருந்து 40 இளைஞர்கள் சின்னாளப்பட்டிக்குச் சென்று, 'பராசக்தி' திரைப் படத்தைப் பார்த்தனர். இரண்டிரண்டு பேராக வரிசையாகத் திரையரங்கிற்குள் உள்ளே நுழைந்த போது, 'கும்மம்பட்டி படை வருகிறது' என சின்னாளப்பட்டி கழகத்தினர் ஆரவாரத்தோடு வரவேற்றுள்ளனர்.




ஓவியம் : சிகரன்

சொந்த ஊரில் மட்டுமல்ல, பகுத்தறிவுப் படைப்புகளுக்கு தமிழ்நாட்டில் எங்கு தடையோ, எதிர்ப்போ எழுந்தாலும் கும்மம் பட்டியில் இருந்து ஆதரவுக்கரம் நீட்டியது, கலை மன்றம். எம்.ஆர்.ராதாவின் 'கீமாயணம்' நாடகத்திற்கு எதிர்ப்பு வந்தபோது, நேரில் சென்று நாடகத்தைக் கண்டுகளித்து ஆதரவு தெரிவித்தனர். சுற்றுப்புறப் பகுதிகளில் எங்காவது புராண நாடகங்கள் நடைபெற்றாலும்கூட அங்கு சென்று, 'பெரியார், அண்ணா, கலைஞரைப் பற்றி பாட்டு பாடுங்கள்' என துண்டுச்சீட்டில் எழுதிக் கொடுத்து பாடவைத்தனர். அப்படி, கலையை கொள்கை பரப்புவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்திய கலை மன்றம், 1953-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி தன்னை நகர்த்தியது.

மாணவர்கள் சிலர் படித்துமுடித்து, வெளியூர்களுக்கு வேலைக்குச் சென்றுவிட்டனர். இதனால், மீண்டும் புதிய மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து கலை மன்றத்தைப் புதுப்பித்தார், கு.சி.பழனிச்சாமி. தாழ்த்தப்பட்ட மக்களை ஊருக்குள் நுழைய அனுமதிக்காத ஊர் பெரியவர்கள் விதித்த கட்டுப்பாடுகளை மீறி, அழைத்து வந்ததுடன், சலவைத் தொழிலாளி ஒருவரை நாடகத்தில் நீதிபதியாக நடிக்கச் செய்து, ஊர் மக்களைப் பார்க்க வைத்தது, 'கலை மன்றம்'. செல்லம் என்ற சலவைத் தொழிலாளிதான் நாடக ஒத்திகைக்காகக் கலை மன்றத்திற்கு இடமும் வழங்கினார். கலை மன்றத்தின் நாயகர் கு.சி.பழனிச்சாமியோ

...பயணிப்போம்.

## ரயில்வே திட்டங்களில் பாரபட்சம் ஏன்?

ஒன்றிய அரசின் 2026-27 நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டுக்கு 2 புல்லட் ரயில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இனி, ஒரு மணி நேரத்தில் சென்னையில் இருந்து பெங்களூருவுக்கும், 2 மணி நேரத்தில் ஹைதராபாத்துக்கும் சென்றுவிடலாம் என்று மோடிக்குப் புகழுரை சூட்டுகிறார்கள் சிலர். திட்டம் நடைமுறைக்கு வந்தால், தமிழ்நாடு அதை மகிழ்ச்சியோடு வரவேற்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், 2022-இல் இயங்கத் தொடங்கிவிடும் என மோடி அரசால் அறிவிக்கப்பட்ட மும்பை – அகமதாபாத் புல்லட் ரயிலே இன்னும் வரவில்லையே! 2019-இல் மோடியால் அடிக்கல் நாட்டப்பட்ட மதுரை எய்ம்ஸ் என்ன ஆனது, கோவை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ஏன் அனுமதி மறுக்கப்பட்டது என்பதையெல்லாம் மறந்துவிட்டு, புல்லட் ரயில் என்று அறிவித்தவுடன், 'வந்துவிடும்' என்று எந்த அடிப்படையில் தமிழ்நாட்டு மக்கள் நம்புவார்கள்?

2 புல்லட் ரயில் திட்டங்களைக் கண்துடைப்பாக அறிவித்துவிட்டு, ரயில்வே பட்ஜெட்டில் ஒட்டுமொத்த தென் மாநிலங்களையும் பா.ஜ.க. வஞ்சித்துவிட்டது என்பதுதான் உண்மை. 2025-26 நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டின் ரயில்வே திட்டங்களுக்கு ரூ.7,611 கோடி ஒதுக்கப்படும் என ஒன்றிய பா.ஜ.க. அரசு தெரிவித்துள்ளது. ஒட்டுமொத்த தென்னிந்தியாவிலும் பா.ஜ.க.வின் கூட்டணி கட்சி ஆளும் ஆந்திரப்பிரதேசத்துக்கு மட்டும்தான் 10,134 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மற்றபடி கேரளாவுக்கு ரூ.3,795 கோடி, தெலங்கானாவிற்கு ரூ.5,454 கோடி, கர்நாடகாவிற்கு ரூ.7,748 கோடி ரூபாய் எனக் குறைவான தொகையே ஒதுக்கப் பட்டுள்ளது. ஆனால், பா.ஜ.க. ஆளும் மகாராஷ்டிர மாநிலத்திற்கு ரூ.23,926 கோடி, உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு ரூ.20,012 கோடி, குஜராத்திற்கு ரூ.17,366 கோடி, மத்தியப்பிரதேச மாநிலத்திற்கு ரூ.15,188 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு மாநிலங்களுக்கு மட்டுமே ஒட்டுமொத்தமாக 76,492 கோடி ரூபாயை ஒதுக்குவதாக அறிவித்திருக்கிறார், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். ஆனால், அனைத்து தென் மாநிலங்களுக்கும் சேர்த்து ரூ.34,742 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வஞ்சகப்போக்கை, மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

## ஃப்ளாஷ்பேக்



### குடும்பத்துடன் தலைவரைக் கண்டேன்!



கந்திலி கரிகாலன்

2019-ஆம் ஆண்டில், நம் கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மரியாதை நிமித்தமாகக் குடும்பத்துடன் சந்தித்த தருணம். எத்தனையோ தருணங்களில் தலைவர் அவர்களைச் சந்தித்திருந்தாலும் குழந்தைகளுடன் சென்று பார்க்கும்போது, 'என்ன படிக்கிறீர்கள்? எதிர்காலத்தில் என்னவாக விருப்பம்?' என்றெல்லாம் தலைவர் அவர்கள் குழந்தைகளிடம் பேசிய அந்தப் பரவசமான நினைவுகளில் இருந்து நான் இன்றளவும் மீளவில்லை.

– கந்திலி கரிகாலன்,
தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்,
கந்திலி, திருப்பத்தூர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

96

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# வாக்குறுதிகளை நிறைவேற்றிய அரசு!

**"நான் யாரையும் எதிரியாகப் பார்க்கவில்லை. நண்பர்களாகத்தான் மதிக்கிறேன்" என்று கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் சொன்னதற்கு, "முதலமைச்சரை நண்பராகத்தான் பார்க்கிறோம். ஆனால், ஆட்சி சரியில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை" என்று தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் விமர்சனம் செய்திருக்கிறாரே?**

தி.மு.க. தன்னுடைய 2021 தேர்தல் அறிக்கையில், ஒவ்வொரு வாக்குறுதிக்கும் வரிசை எண் போட்டுக் கொடுத்திருக்கிறது. அதன்படி, 505 வாக்குறுதிகள் அளிக்கப் பட்டுள்ளன. தி.மு.க. தந்த வரிசை எண் அடிப்படையில்தான், குறிப்பிட்ட சில எண்களைச் சொல்லி, பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் கேள்வி எழுப்புகிறார். இது தொடர்பாகச் சில மாதங்களுக்கு முன்பே நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் ஊடகத்தினரை நேரில் சந்தித்து புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



அதன்படி, தி.மு.க. அளித்த 505 தேர்தல் வாக்குறுதிகளில் 400 (81.2%) வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மாற்றங்களுடன் நிறைவேற்றப்பட்டவை 21 (4.2%) வாக்குறுதிகள். நிறைவேற்றப்பட்டு வருபவை 61 (12.1%) வாக்குறுதிகள், முழுமை பெறாதவை 9 (1.8%) வாக்குறுதிகள். நிறைவேற்ற முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பவை 14 (2.8%) வாக்குறுதிகள். இப்படி மொத்த வாக்குறுதிகளின் நிலையினைத் தெளிவாக விளக்கியுள்ள அரசுதான் திராவிட மாடல் அரசு. 2026 தேர்தலுக்கான தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவை வழிநடத்தும் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. அவர்களும், இதுகுறித்த விவரங்களை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

எனினும், தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் மட்டுமல்ல, அவர்கள் கட்சியுடன் கூட்டணியில் உள்ள அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும்கூட, தி.மு.க. சொன்ன நீட் தேர்வு ரத்து வாக்குறுதி என்னவாயிற்று என்று கேட்பது வழக்கமாக உள்ளது. நீட் தேர்வு ரத்துக்காக சட்டமன்றத்தில் ஒரு முறைக்கு இருமுறை சட்டமுன்வடிவை நிறைவேற்றி, ஆளுநருக்கு அனுப்பியது தி.மு.க. அரசு. அதற்கு ஆதரவளித்தவர்கள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள். ஆதரவளிக்காமல் வெளிநடப்பு செய்தனர் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் உள்ளிட்ட அக்கட்சியின் எம்.எல்.ஏ.க்கள். தமிழ்நாடு சட்டப்பேரவை ஒருமனதாக நிறைவேற்றிய சட்ட முன்வடிவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போடுவது, குடியரசுத் தலைவருக்கு அனுப்புவது என இழுத்தடிக்கும் நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் தமிழ்நாடு சட்டப்பேரவையின் அதிகாரத்தையும், ஜனநாயகத்தையும் மதித்து, நீட் தேர்வுக்கு விலக்களிக்கும் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். தி.மு.க.வால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் நிறைவேற்ற முடியாமல் இருப்பவை அனைத்துமே ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சகப் போக்கினால்தான்.

மாநில பா.ஜ.க. தலைவர் தமிழ்நாட்டில் உள்ள ஆட்சியை விமர்சிப்பதை இனியாவது நிறுத்திக் கொள்ளட்டும். அதற்குப் பதிலாக, அவருடைய கட்சியின் தலைமையிடம், தமிழ்நாட்டைத் தேர்தல் நேரத்திலாவது வஞ்சிக்க வேண்டாம் என்று மாநில நலன் கருதி கேட்காவிட்டாலும், தன் தொகுதியிலாவது வெற்றி பெற வேண்டும் என்ற சுயநலத்திலாவது வாய் திறந்து கேட்பாரா?

...வினா தொடரும்.

## நறுக்கு

### குருவிக்கூட்டில் தீப்பந்தம்!

1964-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்ற கூட்டத்தில், ராஜாஜி அவர்களுடன் கூட்டத்தில் கலந்துகொண்டார் கலைஞர். 'கூட்டுக்கு ஒளி கிடைக்குமென்று, தூக்கணாங்குருவியொன்று, கொள்ளிக்கட்டையைத் தூக்கிக்கொண்டு வந்து கூட்டில் வைத்ததாம். அது, கூட்டைப் பொசுக்கிவிட்டதைப் போல ராஜாஜி அவர்கள் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று' என்கிற உவமையுடன் கலைஞர் உரையாற்ற, அதை ராஜாஜி வெகுவாக ரசித்துப் பாராட்டினார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.